
www.tamilarangam.net



# அடையாளம்

(கவிதைத் தொகுதி)

எஸ். சுதாகினி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடையாளம்

(கவிதைத் தொகுதி)

சுதாகினி சுப்ரமணியம்

(சுதி)

வெளியீடு:

வரையறுக்கப்பட்ட சிந்தனை வட்டம்

பதிப்பகத்தார் (தனியார்) கம்பனி

14, உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை. 20802 ஸ்ரீலங்கா

தொலை பேசி : 081 - 2493746 / 081-2493892

தொலை நகல் : 081 - 2497246

மின்அஞ்சல் : puniyame @ sltnet.lk

சிந்தனை வட்டத்தின் 213வது வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அடையாளம்**

| | |
|---|---|
| நூலாசிரியை: | சுதாகினி சுப்ரமணியம் |
| பதிப்பு : | முதலாம் பதிப்பு மார்கழி 2005 |
| வெளியீடு : | **சிந்தனை வட்டம்**<br>14 உடத்தலவின்னை மடிகே<br>உடத்தலவின்னை, ஸ்ரீலங்கா. |
| அச்சுப்பதிப்பு : | சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு<br>14 உடத்தலவின்னை மடிகே<br>உடத்தலவின்னை, ஸ்ரீலங்கா. |
| அட்டை வடிவமைப்பு: | பீ. சஜீர் அஹமட் |
| கணனி வடிவமைப்பு: | ஸீனத் நவாஸ் |
| ISBN : | 955-8913-26-4 |
| பக்கங்கள் : | 32 |
| : | 70/- |

**Adaiyaalam**

Collection of Tamil Poems

| | |
|---|---|
| Title : | Adaiyaalam |
| Author : | Suthahiny Subramaniyam |
| Printers & Publishers : | Cinthanai Vattam<br>CV Publishers (Pvt)Ltd,<br>14, Udatalawinna Madige, Udatalawinna 20802<br>Sri Lanka |
| Edition : | 1st Edition, December 2005. |
| Language : | Tamil |
| Cover Design : | P. Sajeer Ahamed |
| Type Setted by: | Zeenath Nawaz |
| ISBN : | 955-8913-26-4 |
| Pages : | 32 |
| Price : | 70/- |


**© Suthagini Subramaniyam 2005**

All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

## பதிப்புரை

மற்றுமொரு வளர்ந்துவரும் இளம் கவிஞரின் கன்னிக் கவிதைத் தொகுதியான அடையாளம் எனும் இக்கவி நூலினை சிந்தனை வட்ட முத்திரையுடன் சிந்தனைவட்டத்தின் 213வது வெளியீடாக வெளியிடுவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

1989ம் ஆண்டு சிந்தனை வட்டம் உருவாக்கம் பெற்றதிலிருந்து நாற்பதிற்கும் மேற்பட்ட இளம் கவிஞர்கள் கதைஞர்களுக்கு தமது கன்னிவெளியீடுகளை வெளியிட களமமைத்துக் கொடுக்கப்பட்டமையினால் அவர்களில் பலர் இன்று புகழ் பூத்த கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும் பரிணமித்துள்ளதை பார்க்கும் போது நான் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. நாளைய சந்ததியின் இன்றைய சக்தி எனும் அடிப்படை வாசகத்தினை தன்னோடினைத்து செயற்படும் 'சிந்தனை வட்டம்' நிச்சயமாக எதிர்காலத்திலும் பல இளம் கவிஞர்களுக்கும், கதைஞர்களுக்கும் அரங்கேறக்களமமைத்துக் கொடுக்கும் என்ற செய்தியினை இவ்விடத்தில் அடக்கத்துடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடையாளம் கவிதைத் தொகுதியினூடாக தன்னை ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிஞராக அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் செல்வி சுதாகினி சுப்ரமணியம் அவர்கள் தமிழ்த்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகப் பிரதியாக்கம் ஆகியதுறைகளில் கல்லூரிக் காலத்திலிருந்தே ஆர்வம் மிக்கவராகக் காணப்பட்ட இவர் தனது பல்கலைக்கழக பட்டப்படிப்பின் போது மேற்கொண்ட ஆய்வு 'இலங்கையில் வெளிவரும் பெண்கள் சார் தமிழ் சஞ்சிகைகள் - தேடலும் மதிப்பீடும்' என்பதாகும்.

அடையாளம் தொகுதியில் இணைக்கப்பட்டுள்ள கவிதைகள், ஒரு ஆரம்பகால கவிஞரின் கவிதைகள் என்பதை விட முதிர்ச்சி பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. எதிர்காலத்தில் செல்வி சுதாகினி சுப்ரமணியம் அவர்களிடமிருந்து இதைவிடத் தரமான கவிதைகளை எதிர்பார்க்க முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

சிந்தனை வட்டத்தின் ஏனைய வெளியீடுகளுக்கு ஆதரவு நல்கும் வாசக நெஞ்சகங்கள் இந்நூலுக்கும் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையில் விடைபெறுகின்றேன்.

அன்புடன்
உங்கள்

**கலாபூஷணம் புன்னியாமீன்**

முகாமைத்துவப் பணிப்பாளர்
சிந்தனை வட்டம்
14, உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை.
01.12.2005



## அணிந்துரை

கிழக்கிலங்கை மண்ணுதித்த 'சுதி' எனும் சுதாகினியின் கவிதைகள்சிலவற்றை உள்ளத்து உரைகல்லில் உரசிப்பார்க்கக் கிடைத்ததில், பதிந்த சில உணர்வுகளை அணிந்துரையாக அவரது 'அடையாளம்' எனும் கன்னிக் கவிதைத்தொகுப்பில் வழங்குவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெண் என்ற வகையில் பேறெனவே கருதுகின்றேன்.

உணர்வுகள்- அது உயிரினங்களுக்கெல்லாம் பொதுமையானது. மொழி என்றும், இனம் என்றும் தேசம் என்றும் பாகுபாடுகளை மீறி, கலையுணர்வு மிக்கவன் மனிதன். அவனது உணர்வுகள் பல்வேறு வழிகளில் வெளிப் படுத்தப்படலாம். நடிப்பு, ஓவியம் பேச்சுத்திறன் எழுத்தாற்றல், இசை என்று அவை இயல்பாகவே எடுத்தாளப்படலாம்.

எழுத்துநடை, முன்வைக்க முனைகின்ற கருப்பொருள், அணுகுமுறை அழகியல் சமூக உணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கு இத்தியாதி தொடர்மதிப்பீட்டில் ஒருவரின் எழுத்தாற்றல் - கதையாக கட்டுரையாக கவிதையாக, ஆய்வாக விவரணமாக பரிணமிக்கின்றது..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கற்பனைகளைப் புகுத்திக் கதைக்கான கருவை பெருகூட்டலாம். சிலர் நினைப்பது போன்று கவிதை புனைவது என்பது இலகுவான கைங்கரியமல்ல. உண்மைகளை உள்ளபடி உரைப்பதற்கென்றே வடிக்கப்படுவது கவிதை அதிலும் சமூக உணர்வுகளை மனங்களில் பதிக்கும் வண்ணம் துல்லியமாக வடிக்கப் படும் கவிதைகள் நிலைத்திருக்கக் கூடியன. எனவே தான் கவிதைகளாக வெளிப்படும் ஆக்கங்கள், ஏனைய எழுத்தாக்கங்களை விட வித்தியாசமானது என்பது என் கருத்து. இலக்கணத்துக்கு முக்கியம் கொடுப்பதனால் அழகான மரபுக் கவிதைகள், கருத்துச் செறிவோடு பிறக்கின்றன. இயல்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதனால் உணர்வு பூர்வமான புதுக்கவிதைகள் கருத்துச் சுருக்கத்தோடு உருவாகின்றன. மரபை விட புதுக்கவிதைகளே இன்று மக்கள் மத்தியில் சென்றடையும் வேகம் அதிகமாக இருக்கின்றது என்பது மறுப்பதற்கில்லை.

வந்தாறுமூலை - கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்சிறப்பு இளங்கலைமானிப் பட்டதாரியான சு. சுதாகினி, தனது ஆய்வுக்கெனத் தேர்ந்தெடுத்த தலைப்பு ''இலங்கையில் வெளிவரும் பெண்கள் சார் தமிழ்ச்சஞ்சிகைகள் - தேடலும் மதிப்பீடும்' என்பது. இவரது 'அடையாளம்'' கவித்தொகுப்பிலும், பெண் விடுதலை, ஏக்கம், எதிர்பார்ப்பு என்று பெண்ணியம் அலசப்பட்டிருப்பதனால் தான் இத்தொகுப்பிற்கு அணிந்துரை வழங்க நேர்ந்ததைப் பேறெனக் குறிப்பிட்டேன்.

கவிஞரின், 'வாழ்வோம் வாழ்வோம்' கவிதையில்
''எங்களின் பாட்டிகள் அடுப்படியிலும்
எங்களின் அன்னையர் வீட்டினுள்ளும்
வளைய வந்த காலங்கள் மலையேறி
எங்களின் சகோதரிகள் எல்லை கடந்தனர்.

என்று சந்தோசிக்கும் கவிஞர் அடுத்து இவ்வாறு அலுத்துக்கொள் கின்றார்.



இருந்தும் என்ன பயன்?
எங்களின் இருப்பிடங்கள் எப்போதும்
இரண்டாம் பட்சமாய்....
கேள்விக்கிடமானதாய்....
நீள்கின்றன .. இன்றுவரை....''

என்ன தான் உயர்ச்சியைக் கண்டாலும் பெண்களின் சுயம் சுற்றியுள்ளோரால் தீர்மானிக்கப்படுகின்ற அவலத்தை உணர்த்துவதாக உள்ளது அக்கவி வரிகள்

'பெண்ணவள் பட்ட துயர்' என்ற கவிதையில்
''பெண்பிள்ளை வளர்கையிலே
சொத்துகளைச் சேர்ப்பதுடன்
திட்டியும் தீர்த்திடுவார் - ''என்ற வரிகள்

எத்தனை தான் புதுச் சிந்தனைகள், புதுச்சீர்திருத்தங்கள் இந்த உலகில் மலிந்தாலும் வரதட்சணைக் கொடுமை மட்டும் மாறாமல் இன்றும் மாதரினத்தை மலினப்படுத்திக் கொண்டிருக்கும் விதத்தை நிதர்சனப் படுத்துகின்றது. மாற்றானுக்குத் தாரைவார்க்க, மகளைத் திட்டித்திட்டியே சொத்து சேகரிக்கும் பெற்றோர் கவனத்திற்கு இக்கவிவரிகள் சமர்ப்பணமாகட்டும்!

பெண்களை அனுசரிப்பதில், பாசம் காட்டுவதில் ஆண்களி டையே போலித்தனம் கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதை கவிஞரின் 'இராவணனாய் நீ வருக'' என்ற கவிதை நாசூக்காக உணர்த்துகின்றது. அன்னை சொற்பணிந்து காடாளச்சென்றாலும் கட்டிய மனைவியை மாற்றார் திருப்திக்காகத் தீக்குளிக்க வைத்த இராமனாய் அன்றி, அசுரத்தனம் வெளிப்படையாய்த் தெரிய, சீதையைச் சிறை வைத்தும் சின்னத்தனமாய் நடக்காத இராவணனாய் வருக என்று உண்மையான ஆண்மகனுக்கு அழைப்பு விடுக்கின்றார் கவிஞர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களின் வாழ்வியல் அவலங்களை மட்டும் சித்தரிக்கவில்லை கவிஞர். வாழ்க்கையை வெற்றி கொள்ளச் சாதிக்கவும் பெண்கள் தெரிந்திருக்க வேண்டும் என்கிறார் - பூக்கள் நாங்கள் - உங்களுக்காய்ப் புறப்படுவோம் என்ற கவிதையில்... அதுமட்டுமன்றி, இவரது இன்னும் சில கவிதைகளில் கவிஞர்களுக் கேயுரிய பாணியில், இயற்கை, காதல் அன்பு, யுத்தம், சமாதானம் தேசம் மனிதாபிமானம் என்ற பரந்து பட்ட கருப்பொருள் தொனிக்கின்றமையையும் அவதானிக்க முடிகிறது.

''யார் இந்த வண்ணத்துப் பூச்சிக்கு
வர்ணம் அடித்தவர்'' என்று தனது 'அடையாளம்'
என்ற கவிதையில் ஆண்டவன் படைப்பை இரசிக்கும் வேளையில்
''எங்கோ ஓர் வெடியோசை
ஓ...மனிதர் தம் இருப்பையும்
அடையாளப்படுத்துகின்றார்கள்'' என்று யுத்தத்தின் கோரத்தை உணர்த்தும் விதம் யதார்த்தமாக உள்ளது.

வளர்ந்து வருகின்ற இந்த இளங்கவிஞர் - சின்னப்பூ சுதாகினியின் கவிதைகள் இன்னும் வளம்பெற வேண்டும். இலக்கிய உலகம் இவரைத் தன்னுள் அடையாளம் பதித்துக் கொள்ள, இவர் படைப்புகள் புடம் போடப்படவேண்டும். நிகழ்கால மச்சங்கள் இவரால் அச்சமின்றி வெளிக் கொணரப்படுவதற்கு காத்திரமான இவரது கவிவரிகள் களமமைக்கும் என்பது எனது நம்பிக்கை.

என்றும் எனது ஆசிகள் கவிஞருக்குண்டு.

நன்றி!

**திருமதி மஸீதா புன்னியாமீன்**
கவிஞரும், எழுத்தாளரும், பன்னூலாசிரியையும்.



## 'அடையாளம்' காணும் முன் உங்களுடன் சில நிமிடம்!.....

கவிதை மனித மனங்களின் மொழி. அது ஏதோ ஒன்றினை அடையாளப்படுத்துவது... ஏதோ ஒன்றின் அடையாளமாவதும்... தவிர்க்கவியலாததாகிறது.

என்னிடம் இருந்த பல கவிதைகளில் எனக்குப் பிடித்த கவிதைகளை இத்தொகுப்பில் இணைத்திருக்கிறேன். 14 கவிதைக ளும் சிறிய கவித்துளிகளையும் கொண்ட இத்தொகுதிக்கு 'அடையாளம்'' எனப்பெயரிட்டவர், இம்முயற்சிக்கு அத்திவாரமாய் விளங்கும் எனது மாமா என். செல்வராஜா ஆவார். அடையாளம் என்ற தலைப்பிலமைந்த கவிதையும் இதனுள் அடங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தொகுப்பில் நடைமுறை வாழ்வியல் அனுபவங்களை.. மனித உணர்வுகளை அடையாளம் காண முனைந்திருக்கிறேன். என் தேடலில் தவறுகள் இருப்பின் திருத்திக் கொள்ள அவகாசம் வழங்குவீர்கள் என நம்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறேன். விமர்சியுங்கள் - என் எழுத்தாற்றல் வளரட்டும்...

ஆனால் காயப்படுத்தாதீர்கள்!

இன்று அடையாளம் மூலம் அறிமுகமாகும் இவள்,

மீண்டும் உங்கள் மனங்களுடன் உரையாட வருவாள்.

எனது எழுத்தாற்றல் வளர வளம் சேர்த்த என் குடும்பத்தார், நண்பர்கள், ஆசிரியர்கள், போன்றோருக்கும் அடையாளம் வெளிவர மூல காரணமாய் இருந்த எனது மாமாவிற்கும், உடத்தலவின்னை சிந்தனை வட்டத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் வருவாள்!


**சுதாகினி.**

எல்லை வீதி
செங்கலடி
25-11-2005



# அடையாளம்

(கவிதைத் தொகுதி)



## சுதாகினி சுப்ரமணியம்

## (சுதி)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யதார்த்தம்

வாழ்க்கையின் ஒவ்வொரு
அத்தியாயமும் வாசிக்கப்படும் முன்னமே
கிழிக்கப்படும் கொடுமை இங்கே
நிகழ்கிறது.

தமிழனோ, சிங்களவனோ
மனித இறப்புக்கள் தொடர்ந்து நிகழ்கின்றன.

திரிகள் மட்டுமே
கருகிக் கொண்டிருக்கின்றன.
தூண்டுகோல்கள்
சுகமாகத் தூங்குகின்றன.....
மேத்தாவின் வசனமிது!
ஆனால்,
திரிகள் கருகுவதால் இங்கு
கூரைகளே தீப்பற்றி எரிகின்றன.
இதுதான்
எங்களின் யாதார்த்தம்!

நாம் அனுப்பிவைத்த தலைவர்கள்
பஞ்சுமெத்தையில் பத்திரமாய் உறங்கிடுவர்.
உணவிற்கும் வழியின்றி
உறங்கவும் இடம் இன்றி இங்கே
வாக்காளர் பெருமக்கள்

வடக்கிலும் தெற்கிலும், கிழக்கிலும் மேற்கிலுமாய்
இளசுகள் கருகையிலே
அங்கே டயானா இறந்தமைக்காய்
இங்கே இரங்கலுரை நிகழ்த்துகின்றார்.





## அடையாளம்

யார் இந்த வண்ணத்துப் பூச்சிக்கு
வர்ணத்தை அடித்தவர்?
வண்ண மலர்களுக்கு வாசம்
கொடுத்தவர் யார்?
இந்த வண்டுகளுக்குக் கூட
இனிய ரீங்காரத்தைக்
கற்றுக் கொடுத்தது யார்?

எறும்புகளுக்கு வரிசையாய்
நகரும் ஒழுக்கத்தைப்
போதித்தது யார்?
''அம்மா'' என்று கதறுகையில்
தான் ஈன்ற குட்டிக்காய் துடிக்கும்
மிருகங்களிடை
அன்பை விதைத்தது யார்?

ஆகா! ஆண்டவன் படைப்பில்
இத்தனை மகிமையா?
எனக்குள் எண்ணி நானே மகிழ்ந்த வேளை
எங்கோ ஓர் வெடியோசை!
ஓ! மனிதர்கள் தம் இருப்பையும்
அடையாளப் படுத்துகிறார்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணவள் பட்ட துயர்

பெண் குழந்தை பிறந்ததுமே ''பேய்''
எனச் செப்பி மாந்தர் தூற்றியே நின்றிடுவர்,
அன்னையவள் கலங்கிடுவாள்!

பெண் பிள்ளை வளர்கையிலே
சொத்துக்கள் சேர்ப்பதுடன் - அவளை
திட்டியும் தீர்த்திடுவார்

மங்கைப் பருவமது வந்தது எனக்கூறி
கெட்டித்தனமாக தகப்பன் வீட்டினுள்
பூட்டிடுவான் அவளை தமையனும் தானடிப்பான்

கல்வி கற்றுவிட்டால் மூளை கலங்குமென்று
பெட்டியில் அடைப்பது போல்
பெண்ணை மூடியே வைத்திடுவர்,
உயரவும் விடமாட்டார்!

திருமணம் எனக்கூறி சீதனம் தனைக்கேட்டு
அவளை- உயிருடன் கொன்றிடுவார்.
பணப் பேய்களாய் அலைந்திடுவார்

திருமணம் முடிந்ததுமே துணைவன்
காலினால் உதைத்திடுவான் - அவள்
திக்கித் தவித்திடுவாள், தினம்
தேம்பியே அழுதிடுவாள்!

அன்பில்லாப் பிணத்துடனே
வாழ்வினைக் கழித்த போது
ஆண்பிள்ளை பிறந்ததாலே
ஆனந்தம் பெருகியதே!





மகனவன் வளர்ந்து வந்து
சண்டைகள் செய்து நின்றான்.
தந்தையைப் போல் என்றும்
நடைப்பிணமாய் மாறி நின்றான்.

தனயனும் வெறுத்ததாலே பெண்ணவள்
வாழ்வினை வெறுத்து நின்றாள்
சுட்டெரிக்கும் மணல்வெளியால்
தன் வாழ்வினைத் தேடிச் சென்றாள்!

*நன்றி : கனல்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குனிந்தது போதும் நிமிர்ந்து விடு!



வெண்ணிலவும் சூரியனும்
இல்லாத வானத்தில்
புற்தரையும் தண்ணீரும்
இல்லாத தேசத்தில்
நீ மட்டும் தனியாக நின்றாயே தோழி!

பழமைக்குள் தடம் பதித்து
அடிமைச் சகதிக்குள் உடல் நனைத்து
அவர்கள் குட்டிய போதெல்லாம் -
சிரித்த முகத்துடன் நீ
சிரம் தாழ்த்திய போது
வெடித்தது தோழி என் உள் மனது.

சமத்துவம் பேசும் அவர்கள் கூட
உனக்கு சமாதி கட்ட எண்ணிய போதும்,
சினம் கொண்டு எழவில்லையே
ஏனடி தோழி?

எதுவரை நீடிக்கும் உன்
மௌன யுத்தம்?
குனிந்தது போதும், நிமிர்ந்து விடு!
எங்களின் வானத்தில் நாங்கள் தான் சூரியர்!
இருண்ட வாழ்வு வெளித்திட,
குனிந்தது போதும்! நிமிர்ந்து விடு!



## பூக்கள் நாங்கள் ~
## உங்களுக்காய் புறப்படுவோம்!



மானம் இல்லா மனிதன் எமை
பெண்ணுக்கே ஒப்பிடுவான்.
பூப்போன்ற கையென்றும்
இதழ் போன்ற வாய் என்றும்
மலர் போன்ற முகம் என்றும்
பலவாறு வர்ணிப்பான்!

பூக்கள் எனக்கூறி
பூவைப்போன்றே பெண்ணினத்தை
கசக்கியும் எறிகின்றார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூக்கள் எனக்கூறி
பூவைப்போன்றே பெண்ணினத்தை
கசக்கியும் எறிகின்றார்

விஞ்ஞான அறிவு பெற்றும்
மனிதனுக்கோ மூளையில்லை
மலரெல்லாம் வாடிவிடும் -
பெண்ணினம் வாடிடுமா?

வையத்து மாந்தரெல்லாம்- எமை
தினம் தினம் வதைத்திடுவார்
மாதரை வதைத்திடுதல்
எதுவரைக்கும் நீடிக்கும்?

வாயில்லா மரத்தினிலே பூத்திட்ட பூக்கள்
நாங்கள்
வாயிருந்தும் அதை மூடி, ஒதுங்கிடுதல்
முறையாமோ?

ஆணுக்குப் பெண்ணடிமை
பெண்ணுக்கு ஆணடிமை என்றெல்லாம்
சொல்லிச் சொல்லி வாடுவது வடிவாமோ?


யாருக்கு யார் அடிமை?
பாரினில் பிறந்தோரெல்லாம்- சுதந்திரத் தாய்
பெற்ற பிள்ளைகளன்றோ?

பெண்களாய் இருந்தாலும்
எவர்க்குமோர் எல்லையுண்டு!
நீங்கள் தான் பயந்தாலும்
பூக்கள் நாங்கள் உங்களுக்காய்
புறப்படுவோம்!

*நன்றி: கனல்*



# எமக்கேது கொண்டாட்டம்?



உள்ளன்பு வைத்த சோதரர்கள் யாருமில்லை
உறுதுணையாய் எமைக் காத்த,
நண்பர்கள் கூட இல்லை
அன்பாகப் பேசிடவே அகிலமதில் மனிதமில்லை
இப்படி இருக்கையிலே
எமக்கேது கொண்டாட்டம்?

அன்னையும் தந்தையும் அகதி முகாமினிலே,
அண்ணனுத் தம்பியும் ஆயுதச் சோலையிலே,
ஆறாத் துயருடனே நான் மட்டும் நடுக்கடலில்
இப்படி இருக்கையிலே,
எமக்கேது கொண்டாட்டம்?

புதுவருடம் பிறந்தென்ன?
நத்தார் தான் வந்தென்ன?
பெருநாள் விழா என்ன?
யுத்த மழை பொழிகையிலே
எமக்கேது கொண்டாட்டம்?

இரத்த வெறி பிடித்து நிதம்
அலைகின்ற கூட்டம் இது
திண்டாட்டம் நிறை உலகில்
எமக்கேது கொண்டாட்டம்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தனிமையோடு



தனிமை சில வேளை
சுமையாகவும்.. சுகமாகவும் தோன்றும்!
தனிமை தான் எனக்கென்றும் உறவு
இடறி விழும்போதும்
சுயமாய் மெல்ல எழும் போதும்
ஆதரவாய் ஒரு தளம் தேடும் போதும்
தனிமை எனைப் பார்த்து
ஏளனமாய்ச் சிரிக்கிறது!

அறிவுரையாய் ஆயிரம் வார்த்தைகள்
மெல்ல மெல்ல உதிரும்.
வார்த்தையில் எல்லாம் இலகு.
வாழ்தலில் தான் வலிகள் அதிகம்!

அவர்களுக்கு நல்ல மகளாய்,
அவர்களுக்கு ஏற்ற நண்பியாய்,
அவர்களுக்கு உதவும் உறவாய்,
நான் இருப்பது போல,
ஏன் எனக்கு மட்டும்

யாருமே இல்லையென ஏங்கையில்
தனிமை மட்டும் எனை
அன்புடன் அணைத்துக் கொள்ளும்!



## வாழ்வோம்! வாழ்வோம்!!

அவர்கள் விரும்பிய வர்ணங்கள்
எங்கள் மீது தெளிக்கப்பட்டன!
நாங்கள் சுயம் இழந்து போனோம்.
எங்கள் முகவரிகளை அவர்களே எழுதினார்கள்!
அகவரிகளை நாங்கள் எமக்குள்ளே
புதைத்துக் கொண்டோம்!

நம்மவரை ஆமி அடித்தபோது,
சுனாமி அடித்தபோது,
துன்பத்துள் துவண்டதும், புழுவாய்
துடித்ததும் நாங்கள் தானே?

உறவுகளின் உன்னதத்தில்
ஊறித் திளைத்திருக்கும் - எம்
உணர்வுகளைப் புரியாத பாவனையில்
பரிகாசம் செய்கிறீர்கள்,!

எங்களின் பாட்டிகள் அடுப்படியிலும்,
எங்களின் அன்னையர் வீட்டினுள்ளும்
வளைய வந்த காலங்கள் மலையேறி,
எங்களின் சகோதரிகள் எல்லை கடந்தனர்.
இருந்தும் என்ன பயன்?
எங்களின் இருப்பிடங்கள் எப்போதும்
இரண்டாம் பட்சமாய்...
கேள்விக்கிடமானதாய், நீள்கின்றன,
இன்று வரை!

பெண் குழந்தை பிறந்ததும்
மனதினுள் பதைபதைக்கும் அம்மாக்களை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்த மருமகளை
வாரி வழங்கும்
இயந்திரமாய்
நடத்தும் மாமிமார்களை,
நகப் பூச்சு வாங்கப் பணமில்லையே என ஏங்கும்
தோழிகளை நாங்கள்
மறந்துவிடக் கூடாது!
தவறுகள் திருந்தத் தருணங்கள் பலவுண்டு!

சோகத்தின் சாயல்கள்
எம்மீது சுமத்தப்பட்ட போதும்,
செத்துவிடவில்லை நாங்கள்!
துவண்டு விழாமல் வேர்கொண்டு நிற்கின்றோம்.

சாயம் இழக்காத எங்களின் உணர்வுகளை
இயல்பாக நீங்கள் உணர்கின்ற வரையிலும்
வாழ்வோம்! வாழ்வோம்! நாங்கள்.



## ஒரு மௌனத்தின் அலறல்!



கீதத்தால் வளைத்து,
வார்த்தையால் வதைத்து,
இறுதியில், விதியில் வீசிவிட்டாய்!
இருந்தும் பரவாயில்லை.

வெந்து போன என் வாழ்க்கையில்
புதிதாய் ஒரு புண்ணை
புடம் போட்ட பெருமை
உன்னையே சாரும், வாழ்க நீ!

காதல் ஜாடைகள் காட்டிவிட்டு
தங்கையாய், தோழியாய் மாற்றிக்கொள்ளும்
ஆண்களும் இருக்கிறார்கள்
என்பதற்கு
நீயும் ஒரு அத்தாட்சி!
மறப்பதற்கும், வெறுப்பதற்கும்,
நினைத்தவுடன் அழிப்பதற்கும்,
மனம் ஒன்றும், ஹார்ட் டிஸ்க், அல்ல
ஒரே தடவையில் அழுது தீர்க்கத்
இது ஒன்றும்
தொலைக்காட்சித் தொடர் அல்ல.
வாழ்வியல் தொடர்ச்சி.

இருந்தும் என்னை நானே
மெல்ல மெல்ல மாற்ற முயல்கிறேன்
கடைசியில் ஒரு வார்த்தை,
காதல் கல்லில் இடறிய என்னை
கீழே விழும் முன்னர்
நின்று நிதானிக்கச் செய்த உனக்கு
மனமார்ந்த நன்றிகள்!

*தினக்குரல் (கொழும்பு), 22.09.2002*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வீரர்கள்

அஹிம்சை நெறி அளவோடு இருக்கட்டும்
எமை இம்சை செய்வோரை
நம் கையே தடுக்கட்டும்!

பொறுத்திருந்து பொறுத்திருந்து
பொழிந்த கண்ணீர் இனிப் போதும்!
விழித்தெழுந்து, உயிர்த்தெழுந்து,
செயற்படவும் வேண்டும்.

குட்டக் குனிந்திடும் மடையரல்ல நாங்கள்
பெட்டிக்குள் பூட்டிவைத்தால்
பேசாமல் இருப்போமா?
மெல்ல மெல்ல தடம் பதித்து
இமயத்தை தொட்டிடுவோம்!

சொத்து சுகம் தேவையில்லை- உங்கள்
சகவாசம் தேவையில்லை
சொந்தக் கால் இருக்கையிலே
மாற்றான் கால் நமக்கெதற்கு?

அந்நியரின் ஆட்சியிலே
அறுத்தெறிந்த விலங்கெல்லாம், இன்று
உள்நாட்டுச் சந்தையிலே
ஏலத்தில் போகிறதாம்

புழுதியிலே நாங்கள்
புரண்டுழைத்த செல்வங்களை
'பூர்ஜுவாக்' கூட்டம்
சுவீகரிக்கும் நேரத்தில்,





அள்ளிக் கொடுப்போமோ?
இல்லை,
சும்மா தான் கிடப்போமோ?

அடிமையாய் அடங்கி
அடிகள் பல வாங்கி
பல்லிளித்து நின்றதெல்லாம்
அந்தக் காலம்.
அடிமைத் தளை களைந்து
சமத்துவ விதை தூவி
சந்தோசத் தேரினிலே
பவனி வரும் காலமிது!

ஏழைகளின் உலகம் இது!
உழைக்கும் உள்ளங்களின் தேசம் இது!
வாருங்கள் மனிதர்களே
நீங்களும் இணைந்திடுங்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இராவணனாய் நீ வருக

வில்லுடைத்து வீரம் காண்பித்த
இராமனாய் நீ வேண்டாம்
அன்னையின் ஆணைக்காய்
காடாளச் சென்றுவிட்ட
இராமனாய் நீ வேண்டாம்!


கட்டிய மனைவியைத்
தீக்குளிக்க வைத்த
கயவனாய் நீ வேண்டாம்!
சீதையைச் சிறை வைத்தும்
கீழ்த்தனமாய் நடக்காத
இராவணனாய் நீ வருக!
அசுரத் தனங்கள்
வெளிப்படையாய் தென்பட,
நாடகம் ஆடாத
இராவணனாய் நீ வருக!
நான் உன்னை வரவேற்பேன்!



*(சக்தி எப்.எம். வானொலி 25.07.1999)*



## சுடலை ஞானம்



எனது சோதரிகளை, எனது உறவினரை,
அயலவரை,
உள்வாங்கிக் கொண்ட சுடலையைப் பார்க்கின்றேன்.

கண்கள் பனித்தன,
அதரங்கள் துடித்தன,
உள்ளம் கொதித்தது.

அவர்கள் பாக்கியசாலிகள்
கௌரவமாய் அடக்கம் செய்யப்பட்டார்கள்.
ஆனால் நாங்கள்?
எங்களின் உயிரற்ற உடல்கள்
நாளை எந்தெந்த மூலைகளில்
எப்படிக் கிடக்குமோ என்ற கிலி
எனக்குள் படர்கின்றது.

சவக்களை தொனிக்க
நகர்கின்றது எமது வாழ்வியல் பயணங்கள்,
ஓ! நாங்கள் மனிதர்கள்,
அதிலும் தமிழர்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எங்கள் தேசம்




அந்நிய தேசத்து நண்பனே!
எனது நாடு எப்படி என்று கேட்கிறாயா?
வார்த்தையில், வரிகளில்
புரிந்து கொள்வாயா?

நண்பா!
உனது கால்களே-நீ நடப்பதை தடைசெய்தால்,
உண்மைகளை,
உன் ஆசைகளை வெளியிட
உன் வாயே மௌனித்தால்..
நல்லதை புரியும் உன் கரங்கள்
செயலாற்ற மறுத்துவிட்டால்,
உன் இதயம் கூட,
விட்டு விட்டுத் துடிக்க ஆரம்பித்தால்.

எப்படி இருக்கும் உனக்கு?
அப்படியே எங்களுக்கும்
எங்கள் தேசம் இருக்கின்றது!



## ஏன்?



அன்று, அதர்மத்தின் தாண்டவத்தில்
அடிக்கடி நீ அவதரித்தாய்!
தர்மத்தை நிலைநாட்டி மனங்களிலே
இடம் பிடித்தாய்.

இன்று, அதர்மத்தின் ஆட்சியிலும்
உன் வரவைக் காணவில்லை.
காத்திருந்த, பார்த்திருந்த
என் மனமும் குளிரவில்லை.

அவதாரமாகும் முன்னே
'அபோர்ஷன்' ஆனாயோ?
பெண்ணாக உயிர் படைத்து
கருச்சிதைந்து போனாயோ?

மனிதனாய் அவதரித்தால்
மனம் மாறிப் போவாயோ?
நீயுமா இப்படி எனப்
பேதலிக்க வைப்பாயோ?

ஏனடா கண்ணா! உன்
பிரசவம் நடக்கவில்லை?
அவசரப் படுகிறது என் உள்மனது
உன் வரவைப் பார்ப்பதற்கு!

www.tamilarangam.net

## கவிதைத் துளிகள் (1)

*தவிர*

வார்த்தைகளுக்கு சுயம்வரம்
நடத்தியும் - என் கவிதைக்கு
வரிகளே வாய்க்கவில்லை - உன்
பெயரைத் தவிர!

*நீ*

வளாக வாழ்வில்
நான் கண்ட
முதல் வசந்தம் -

*போதும்*

கனவுகள் கூட கண்ணீரால்
களவாடப்படும் போது -
ஊமைக்கேது வாய் வார்த்தை?
கலவரப்பட்டுக் கலங்குவதை விட
மௌனங்கள் போதும் பரிபாஷை பேச!

*நிஜம்*

புயலுக்குள் பிறந்தவள் தான்
புயலோடு போகவில்லை
நீ வந்தாய் ஒரு தடவை
என்னோடு நான் இல்லை!

*தினக்கதிர் (மட்டக்களப்பு), 12.05.2002*



## கவிதைத் துளிகள் (2)

*பிரிவு*

உன் உறவுப் பாலத்தில்
தொடர்ந்த என் - உயிரின் யாத்திரை
பிரிவெனும் பள்ளத்துள்
வீழ்ந்தபோது,
உணர்ந்து கொண்டேன்
அது-காதல் என்று..

*கவிதை*

என் இதய ஏட்டில்
உன் நினைவுகள்
புதுக் கவிதை!



*அது வரை*

நீ என்னை நேசிக்காவிட்டாலும்
பரவாயில்லை,
யாரையும்
காதலிக்காத வரை!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்கள் பார்வையில்
பயங்கரவாதியாய்,
முதலாளிகள் பார்வையில்
வெறும் வேலைக்காரனாய்,
வஞ்சகர் பார்வையில் ஏமாளியாய்
தெரிந்த என்னை -

நீ மட்டும் தானே
என்றும் உன் குழந்தையாய்
நெஞ்சுக்குள் தாங்கினாய்!

*தினக்கதிர் (மட்டக்களப்பு), 26.05.2002*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்